1969 பிப்ரவரி 24]

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, மதுரையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கோர்ட்டு கட்டிடங்கள் வேலை எப்பொழுது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஜுன் மாதம் நீதிமன்றங்களைத் திறக்கும்பொழுது அதை முடித்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் மாடிக் கட்டிடங்கள் இன்னும் முடிவடையாமல் இருப்பதால் சில மாதங்கள் அதிகம் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

Establishment of Sugar Mills

* 41 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether three more sugar mills are to be started in Tamil Nadu this year (1968);

(*b*) if so, whereat and on what basis (either under public or co-operative sector, or private sector); and

(*c*) the quantum of Central assistance for these mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இல்லை.

THIRU K. VINAYAKAM: A press communique has been issued by the Ministry under reference that three more sugar mills will be established in Tamil Nadu. If so, is what the Minister says correct or is the press communique correct?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டும் சரி, நம்முடைய கனம் அங்கத்தினரவர்கள் கேள்வி கேட்டிருப்பது 1968-ம் ஆண்டிற்குத்தான். ஆகவே, இல்லையென்று சொன்னேன். நமது அரசைப் பொறுத்த அளவிற்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவு முறையிலே அமைப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டிருக்கிறது.

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படித் துவக்க இருக்கிற மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் 2 ஆரம்பிக்கப் போவதாக கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த இரண்டையும் எந்த எந்த இடத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அனுமதி கிடைத்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: மதுரையில் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் ஓடுவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுகிற அந்த அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நன்ருக நடக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சர்க்கரை போதிய அளவுக்குக் கிடைக்க வேண்டுமென்பது வேறு, ஒரு தனிப்பட்ட ஆலையிலே தவறுகள் இருப்பது வேறு. அலங்காநல்லூர் ஆலையிலே தவறுகள் இருப்பது உண்மை. அதைப் போல் வேறு சில ஆலைகளும் இருக்கிற காரணத்தால் ஒரு போர்டு மெம்பர் அதை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிருர்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே பல ஆலோசனைகள், இதுபோன்ற சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Industrial Estates

* 42 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the number of Government Industrial Estates yet to be opened and the reasons for the delay in opening them?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டாவது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழில் பேட்டைகளில், சேலம் தொழில்பேட்டை தவிர, மற்றவை யாவும் திறவப்பட்டு விட்டன. சேலம் தொழில்பேட்டை சம்பந்தமாக நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளதால், நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முடிவடையாமல் உள்ளன. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பதின்மூன்று தொழில்பேட்டைகளும் மூன்ருவது திட்டத்தில் முழுதும் நிறைவேற்றப்படாமல் தொடர்ந்து வரும் ஒரு திட்டமும் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கட்டுமான வேலைகள் முடிந்த பிறகு அவை ஏற்படுத்தப்படும். இவற்றை நிறைவேற்றுவதில் கால தாமதம் எதுவுமில்லை.

* 43 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர், அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 44 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to open an Industrial Estate at Hosur; and

(*b*) when it will be started?